


திருவாசகம் - 38
திருஏசறவு கதைவழியில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# திருஏசறவு கதை வடிவில்

## சுட்டறிவு ஒழிதல்

## திருப்பெருந்துறையில் அருளியது

ஏசறவு என்பது துதித்தல். துதித்தலின் மூலம் பொறிபுலன்களை அழித்தல்.

**இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்**
**கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினைஉன் கழலிணைகள்**
**ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகளெல்லாம்**
**பெருங்குதிரை ஆக்கியவா றன்றேஉன் பேரருளே. 01**

நடராசாவின் தாயான இராசம்மாவும் தர்மலிங்கமும் கதிரேசனின் வீட்டுக்கு வந்தனர். இருவரும் சோடியாகச் சிரித்துக் கதைத்துக் கொண்டு வருவதைப் பார்த்த கதிரேசன் என்ன பேசவருகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டார்.

இராசம்மா கதிரேசனின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள். பின், ‘‘ஐயா கணவனை நான் இழந்தபின்பு எனக்கு நீங்கள் செய்த உதவிகள் கணக்கற்றவை. நடராசா இன்று பல்கலைக்கழகத்தில் திறமையான மாணவனாகத் திகழ்வதற்கும் நீங்கள் தான் காரணகர்த்தா. அதுபோல அவனுக்கு ஒரு நல்வாழ்வை அமைத்துக் கொடுங்கள். எனது அண்ணாவின் மூத்தமகளின் சாதகம் அவனுக்கு நல்ல பொருத்தமாக உள்ளது. அவனைச் செய்ய அண்ணாவுக்கு விருப்பம். எனக்கும் விருப்பம். நடராசாவுடன் நான் இன்னும் இதைப்பற்றிக் கதைக்கவில்லை. கதைத்தால் தான் இன்னும் படிக்க வேண்டும் என்று சொல்வான். அண்ணா பெரும் பணக்காரன். அவனுக்குப் படிக்க உதவிகள் செய்வார். அதனால் நீங்கள் அண்ணாவின் மூத்தமகள் அர்ச்சகாவைத் திருமணம் செய்யும்படி கூறுங்கள். நீங்கள் சொன்னால் அவன் ஏற்பான்’’ என்றாள்.

‘‘நான் யாரையும் வற்புறுத்த மாட்டேன். இருவரும் விரும்பினால் அதைச் செய்து வைப்பேன். நான் நடராசாவுடன் கதைத்துவிட்டுச் சொல்கிறேன்’’ என்றார்.

‘‘வற்புறுத்திச் சொல்லுங்கோ’’ என்றான் இராசம்மாவின் சகோதரன் தனபாலசிங்கம். கதிரேசன் அதற்குப் பதில் கூறவில்லை.

அன்று மாலை ஆச்சிரமத்தில் உள்ள சிவன் கோவில் மண்டபத்தில் கதிரேசன் இருந்தபோது நடராசா வந்து அவரைப் பணிந்துவிட்டு அருகில் கையைக் கட்டியபடி நின்றான். சிலகணங்கள் இருவரும் பேசவில்லை. முதலில் நடராசாதான் பேசினான்; ‘‘ஐயா, எனக்கு நீங்கள் தான் சிவன். அம்மாவும் மாமாவும் காலையில் உங்கள் வீட்டுக்கு வந்து எனது திருமணம் பற்றிக் கதைத்தாக நல்லைநாதன் அண்ணை சொன்னவர். நான் இப்போது திருமணம் செய்ய விரும்பவில்லை. மேற்படிப்புப் படிக்க விரும்புகிறேன். எனக்குச் சிவன் நீங்கள். அதனால் வழிகாட்டியும் நீங்கள். எனக்கு அர்ச்சகாவைத் திருமணம் செய்ய விருப்பமில்லை. தயவுசெய்து வற்புறுத்தாதீர்கள். நீங்கள் யாரையும் வற்புறுத்துவது இல்லை. பற்றுக்களாலும் துயரங்களாலும் இரும்புபோல இருந்த எனது மனதைக் கரும்பாக மாற்றினீர்கள். கரும்பின் சுவையை ஒத்த சிவனின் திருவடியை வணங்கும்படி சொன்னீர்கள். அதற்கு உதாரணமாக, மாணிக்கவாசகரின் திருவாசகத்தை விளக்கமாகச் சொல்லி அதைத் தினமும் படிக்குமாறு கூறினீர்கள். மாணிக்கவாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கிய சிவபெருமான் உனக்காக உனது துன்பங்களை இன்பங்களாக்குவார் என்றீர்கள். அதை நம்பிச் சிவனை வணங்கிய எனது துன்பங்கள் யாவும் இன்பங்களாகிவிட்டன. இப்போ சிவனை வணங்காது மதுவும் மாமிசமும் உண்ணும் மாமாவின் பெண்ணைத் திருமணம் செய்யுமாறு அம்மா சொன்னால் நான் செய்ய முடியுமா…? எனக்கு அத்திருமணம் வேண்டாம். அதைச் செய்தால் இப்போது கரும்பாக இருக்கும் மனம் மீண்டும் இரும்பாகி விடும். இது உங்களுக்கு விருப்பமா..?’’ என்று கேட்டான் நடராசா.

**பண்ணார்ந்த மொழிமங்கை பங்காநின் ஆளானார்க்கு**

**உண்ணார்ந்த ஆரமுதே உடையானே அடியேனை**

**மண்ணார்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்நீ வாஎன்னக்**

**கண்ணார உய்ந்தவா றன்றேஉன் பழல்கண்டே 02**

‘‘தாத்தா, உமாமகேசுவரனான சிவன் அன்பர்களுக்கு அமிர்தம் போன்றவன். பிறப்பை அறுக்கும் பொருட்டு மாணிக்கவாசக சுவாமிகளை ஆட்கொண்டவன். உனது திருவடியைக் கண்டு நான் உய்வடைந்தேன்’’ என்று திருவாசகத்தைப் பற்றியும், மாணிக்கவாசக சுவாமிகளைப் பற்றியும் கூறினீர்கள். மாணிக்கவாசக சுவாமிகள் கூறியது போலச் சிவன் அடியவர்களுக்கு அமிர்தம் போன்றவன். நான் அவனை முழுமனதோடு வணங்கியமையால் எனது பிரார்த்தனையை ஏற்றவன். அவனது திருவடிகளை மீண்டும் மீண்டும் தொட்டு வணங்குவதால் நான் பெரும் பயன்களை அடைந்து வருகின்றேன்.

இப்போது பல்கலைக்கழக நிர்வாகம் என்னை மேற்படிப்புக்காகத் தேர்ந்தெடுத்துள்ளது. அதையும் கற்று முடித்துவிட்டு வெளிநாட்டிற்குச் சென்று கல்வி கற்க விரும்புகிறேன். சிவன் அதற்கு உதவி செய்து கொண்டே இருக்கிறான். அதை நான் இழக்க விரும்பவில்லை'' என்றான் நடராசா.

''உனது விருப்பப்படி நீ வாழ்வது தான் முறை. எனது அன்பன் ஒருவன் தவறான வழியில் வாழ்ந்தால்தான் நான் அதில் தலையிடுவேன். நீ பெரும் சிவபக்தன். சிவனின் அடியவன். எக்குற்றமும் செய்யாதவன். உனது தாயார் தனது சகோதரனின் மீதுள்ள பாசத்தாலும், அவரிடம் உள்ள பணத்தாலும் ஆசைப்பட்டு அறியாமையால் பேசுகிறார். அதை விளக்கிக் கூறலாம். நீ சஞ்சலப்படாது உனது படிப்பைத் தொடர்'' என்றார் கதிரேசன்.

நடராசா கண்களால் கண்ணீர் பெருகக் கதிரேசனின் பாதங்களைக் கட்டி அணைத்து அழுதான், ''தாத்தா, நீங்கள் அம்மாவுக்காக மனம்மாறி என்னை வற்புறுத்தினால் அடுத்து என்ன செய்வதென்று புரியாது தவித்தேன். நல்லைநாதன் அண்ணர்; ''கதிரேசண்ணை பெரும் சிவபக்தர். ஊரவர் அவரை நடமாடும் சிவன் என்பார்கள். கவலைப்படாதே அவர் உன்னை ஒருபோதும் வற்புறுத்தமாட்டார்'' என்றவர். இருப்பினும் எனது மனம் கலங்கிக் கொண்டிருந்தது'' என்றான் நடராசா.

**ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னும் அருநரகில்**

**ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற் காவாவென்று**

**ஓதமிலி நஞ்சுண்ட உடையானே அடியேற்குன்**

**பாதமலர் காட்டியவா றன்றேஎம் பரம்பரனே. 03**

''தாத்தா, என்னால் எதையும் முடிவெடுக்க முடியவில்லை. பல்கலைக்-கழகத்தில் அடுத்த வாரம் பரீட்சை தொடங்குகிறது. அதில் மனதைச் செலுத்த முடியாதவாறு அம்மாவும் மாமாவும் தொல்லை கொடுக்கின்றனர். அதனால்தான் எல்லாவற்றையும் உங்களுக்குச் சொல்கிறேன். சுருக்கமாகச் சொல்வதானால் சிவனைக் கூட என்னால் வணங்க முடியவில்லை. இதுவரை காலமும் என்னை ஒரு உருப்பட முடியாதவனாக நினைத்த மாமாவுக்குப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருக்கும் அவரது நண்பர் ஒருவர் எனது நிலையைப் பற்றிக் கூறிவிட்டார். அன்றிலிருந்து மாமா என்னைத் துக்கப்படுத்துகிறார். நீங்கள் மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வதாகச்

சொல்வீர்கள்; "சிவன் உலகை உய்விக்கும்பொருட்டுக் கடலில் கிளம்பிய நஞ்சை உண்டமையால் உலகம் காப்பாற்றப்பட்டது என்று" இன்று சிவனை வணங்குவோர் பிறரின் நன்மைக்காகச் செயற்படுவதில்லை. தமது நன்மைக்காகத் தான் செயலாற்றுகின்றனர். அதை நினைக்க எனக்கு வெறுப்பாக உள்ளது. மகாலிங்கம் அண்ணை நேற்று மாலை வந்து அர்ச்சகாவைத் திருமணம் செய்யும்படி வற்புறுத்துகிறார். எனக்கு விருப்பமில்லை என்று சொன்னதும் புத்திமதிகள் கூறுகிறார். விருப்பமில்லாத ஒன்றை வற்புறுத்துவது சிவனடியார் என்று சொல்பவர்களுக்கு நியாயமானதா…?"

"மகனே, எல்லாப் பொறுப்புக்களையும் சிவனிடம் ஒப்படைத்து விட்டதாகக் கூறும் நீ இவ்வாறு நம்பிக்கையீனப்படுவது பெரும் தீமையைத் தரும். சிவன் குறைபாடுகளை உடைய தன்னை ஆட்கொண்டது வியப்புக்குரிய செயல் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். அதற்குக் காரணம் நம்பிக்கை. நம்பிக்கை என்பது மனதை வைரமாக மாற்றும். அந்த மாற்றம் கடவுளையும் அசைக்கும் தன்மை வாய்ந்தது. அந்த மாதிரியான நம்பிக்கைதான் மாணிக்கவாசக சுவாமிகளிடம் இருந்தது. எல்லாம் வல்ல சிவனை நம்பும் நீ ஏன் உனது மனதைத் தளரவிடுகிறாய். சிவனடியாரவது மனம் உறுதிப்பாட்டால் செய்ய முடியாததையும் செய்ய வைக்கும். அதனால் நம்பிக்கையை இழக்காதே" என்றார் கதிரேசன்.

**பச்சைத்தா ரைவாட்டீ படர்சடையாய் பாதமலர்**
**உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக்கொண்டு**
**எச்சத்தார் சிறுதெய்வம் எத்தாதே அச்சோஎன்**
**சித்தத்தா றுய்ந்தவா றன்றேஉன் திறம் நினைந்தே. 04**

"நடராசா, பச்சை நிறமுடைய நாவினை உடைய அரவத்தை அணிந்த விரித்த சடையை உடைய சிவன் தனது திருவடியை வணங்குவோருக்கு அவர்கள் நினைத்ததை வழங்குபவன்". நான் சிறு தெய்வங்களை வணங்காது உன்னையே போற்றும்படி செய்தாய். அது வியப்புக்குரியது" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். நீ அதை ஞாபகத்தில் கொண்டாயானால் நம்பிக்கையை இழக்க மாட்டாய். சிறுசிறு தெய்வங்களையும் வணங்கமாட்டாய். உனது நாத்தான் சிவனது நாமங்களைக் கூறுகிறதே தவிர மனம் நாடவில்லை, நம்பிக்கையும் கொள்ளவில்லை. நம்புபவன் கவலை கொள்ள மாட்டான். இது ஒரு சாதாரண நிகழ்வு. மாட்டன் என்று கூறு.

தெண்டித்தால் இது தான் எனது முடிவு என்று உறுதியாகச் சொல். இது சிரமமானதா…? அவர்கள் என்னிடம் தான் திரும்பி வருவார்கள். அவர்களுக்கு நான் பதில் கூறுகிறேன். வாழ்க்கை என்பது இன்றோ நாளையோ முடிவடைவதில்லை. அது ஆயிரங்காலத்துப் பயிர் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நீ முழுமையாகச் சிவனை நம்பு. அதன் பின் பேசலாம்'' என்றார் கதிரேசன்.

**கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்**

**மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்**

**தூற்றிறுமாந் திருந்தேன்எம் பெருமானே அடியேற்குப்**

**பொற்றிவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே. 05**

கதிரேசனும் நடராசாவும் கதைத்துக் கொண்டிருந்தபோது சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆச்சிரமத்தில் உரையாற்றினார்; ''சிவனடியார்களே, மார்கழி மாதம் புனிதமானது. அதனால் தான் திருவெம்பாவை பாடப்படுகிறது. அது சிவனைப் புகழ்ந்து பாடுவது. திருப்பள்ளியெழுச்சி சிவனைத் துயிலெழுப்புவது. இரண்டையும் மாணிக்கவாசக சுவாமிகள் இயற்றிப் பாடியபின் மக்கள் அதைத் தொடர்ந்து பாடுகின்றனர். திருவாசகத்தில் திருஏசறு என்றொரு பகுதி உண்டு. அது சிவனைத் துதித்தலாகும். அவர் சொல்கிறார்; ''எனக்கு கலைகளின் அறிவு இல்லை. அருள்த்தாகமும் இல்லை. எனது வாழ்நாளைச் சிறு தெய்வங்களைப் போற்ற நான் பயன்படுத்தவில்லை. உன்னையே சார்ந்திருப்பதால் எனக்குத் தற்பெருமை இருந்தது. அத்தகைய என்னை நீ ஆட்கொண்டது நாய்க்குப் பொன்னாலான பட்டி கட்டியது போன்றதாகும். அந்த உனது செயல் வியப்புக்குரியது'' என்கிறார். நாய்க்கு உணவு வைத்தால் போதுமானது. அதற்குப் பொன்னாலான சங்கிலியைப் போட்டு அழகு பார்த்தால் அதன் அழகோ அல்லது அதன் பெறுமதியோ அதற்குத் தெரியாது. ஒரு பொருளின் பெறுமதி தெரியாது அதைப் பாவிப்பதும், ஒரு பாடலின் பொருள் தெரியாது அதைப் பாடுவதும் பெருமையல்ல, பெறுமதியுமல்ல. எனவே மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தைப் பொருளுணர்ந்து பாடுங்கள். அத்துடன் அவை கூறும் தத்துவங்களை நம்புங்கள். பொருள் தெரியாமலும், நம்பிக்கையின்றியும் செயற்படுவது விழலுக்கு இறைத்த நீராகிவிடும். அத்துடன் அதைக் காட்டில் உதித்த பூரண சந்திரனின் ஒளியென்றும் அறிஞர் வர்ணிப்பர்..'' சுவாமியார் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

‘‘மகனே, சுவாமியார் சொல்வதை நன்றாகக் கேள். கேட்பதால் பயனேற்படாது. அதை நம்புவதால் தான் பயன் உண்டாகும். சித்திரத்தில் உள்ள மாங்கனி அழகாக இருக்கும். அது சுவையைத் தருமா…? கற்ற உனக்கு நான் பெரிதாக எதையும் சொல்ல வேண்டியதில்லை’’ என்றார் கதிரேசன்.

**பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு**

**நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின்னருளால்**

**உய்ஞ்சேன் எம் பெருமானே உடையானே அடியேனை**

**அஞ்சேலென் றாண்டவா றன்றேஅம் பலத்தமுதே 06**

‘‘மகனே, மாணிக்கவாசக சுவாமிகள் பஞ்சு போன்ற பாதங்களையுடைய அழகிய பெண்களின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கியிருந்த என்னை, நீ உன் கருணைமிக்க அருளால் ஆட்கொண்டு அபயம் அளித்தது பெரும் வியப்புக்குரியது. அதனால் நான் யோகத்திற்கு உரியவனாவேன்’’ என்கிறார். சைவசமயம் இல்லறத்தைத்தான் வற்புறுத்துகிறது. ஒரு இல்வாழ்வான் உரிய வயதில் திருமணம் செய்து சைவப் பண்பாட்டுக்கமைய இல்லறம் நடத்தி நல்ல சமூகத்திற்கு உதவக்கூடிய பிள்ளைகளைப் பெற்று அவர்களின் கடமைகளை நல்லபடி முடித்துவிட்டு மனைவியுடன் துறவுபூண வேண்டும் என்று சொல்கிறது. இல்வாழ்வுதான் மனிதனைப் பூரணப்படுத்திச் சிவனைச் சேர வைக்கிறது. அப்படியிருந்த போதும் மாணிக்கவாசக சுவாமிகள் இல்வாழ்வை விரும்பாது துறவை மேற்கொண்டவர். அதற்குக் காரணம் காமத்தைவிடத் தெய்வீகத்தை விரும்பியமையே. சிலர் காதலிப்பர். பெற்றோர் மணம் பேசுவர். அதனல் அவர்கள் இல்லறத்தை வெறுப்பவர் போல நடந்து கொள்வர். நீயும் அப்படி இருப்பாயோ என்ற ஒரு சந்தேகம் எனது மனதில் நீண்டகாலமாக உண்டு. கதிரவேலுப்பிள்ளை தனது மகள் சமீபகாலமாகப் பெருஞ் சோகத்தில் உள்ளாளாம். அது பற்றி அவர் தனது மகளான அகல்யாவின் தோழிகளை விசாரித்தபோது அவர்கள் அவள் உன்மீது காதல் கொண்டுள்ளாள் என்று கூறினார்களாம்….’’ என்று கதிரேசன் கூறும்போது நடராசா இடைமறித்துச் சொன்னான்; ‘‘தாத்தா அப்படி ஏதுமில்லை. அவள் திமிர் பிடித்தவள். நான் முன்பு அவர்களின் வீட்டில் கூலியாக வேலை செய்தபோது தான் தனது பணத்திமிரைப் பற்றிப் பலவழிகளிலும் காட்டியவள். ஆணவம் பிடித்தவள். பணக்காரி என்ற திமிரில் என்னைக் கொத்தடிமையாக நடத்தியவள். வாழவேண்டும் என்பதற்காக அவளின் செயல்களை நான் மதிக்காது செயற்பட்டபோதும் அந்த வலி இப்போதும் எனக்கு நெஞ்சில் உண்டு’’ கலங்கினான் நடராசா.

**என்பலைப் பிறப்பறுத்திங் கிமையவர்க் கும் அறியவொண்ணா**

**தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமான்**

**அன்பால்நீ அகம்நெகவே புகுந்தருளி ஆட்கொண்ட**

**தென்பாலே நோக்கியவா றன்றேஎம் பெருமானே. 07**

‘‘மகனே, மாணிக்கவாசக சுவாமிகள், ‘‘தேவர்களாலும் அறியவொண்ணாத திருப்பெருந்துறையில் கோவில் கொண்டிருக்கும் சிவனே, எனது பிறப்பை அறுத்து என்னை ஆட்கொண்டது என்மீது நீ வைத்த கருணையினால் தான் என்று எனக்குத் தெரியும்’’ என்கிறார். கதிரவேற்பிள்ளை வந்து தனது மகளைப் பற்றிச் சொன்னமையால் நான் அவளுடன் சென்று கதைத்தேன். அவள் உன்னை மிகவும் தீவிரமாகக் காதலிக்கிறாள் என்பதை அறிந்து கொண்டேன். தேவர்களாலும் சிவனை மட்டுமல்ல ஒரு பெண்ணின் உள்ளத்தில் உள்ளதையும் அறிந்து கொள்ள முடியாது. அவள் பெரும் தனவந்தனின் மகள். உன்னோடு அடிக்கடி கதைக்கவும், உன்னைப் பார்க்கவும் விரும்பினாள். அதனால்தான் உன்னைச் சுற்றிச் சுற்றி வந்தவள். யாரும் உன்னோடு சிரித்துக் கதைப்பதைக் கண்டால் அதைத் தவறாக எடுத்தால் பின்னால் உனக்குப் பெரும் துன்பங்கள் ஏற்படும் என்பதற்காகவே அவள் அவ்வாறு கதைத்தாள். அவள் ஒழுக்கமான பெண், படித்தவள், நல்ல அழகி. அவள் உன்னை மிகவும் தீவிரமாக நேசிக்கிறாள். உனது பெருமைகளை உணர்ந்த கதிரவேற்பிள்ளை உன்னை அவளுக்குத் திருமணம் செய்ய விரும்புகிறார். அவள் ஆச்சிரமத்தில் உள்ள சிவலிங்கத்திற்கு அதிகாலையில் மாலைசூட்டித் திருவாசகம் பாடி வணங்குகிறாள். அது உன்னைத் திருமணம் செய்வதற்காக என்றும் சொல்கிறாள்’’ என்றார் கதிரேசன்.

**மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா**

**ஓத்தானே பொருளானே உண்மையுமாய் இன்மையுமாய்ப்**

**பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்**

**பேர்த்தேநீ ஆண்டவா றன்றேஎம் பெருமானே. 08**

நடராசா திகைத்துப் போனான். அப்படி அவன் ஒருபோதும் திகைத்ததில்லை. கண்டபோதெல்லாம் திட்டித் தீர்க்கும் அவளின் மீது தீராத வெறுப்பையே அவன் கொண்டிருந்தான். அவளைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் அவனது இருதயத்தில் ஒரு மூலையில் இருந்து கொதித்துக் கொண்டிருந்தது. அப்படி இருக்க அவளின் மனதில் இப்படி ஓர் எண்ணம் இருந்தது அவனுக்குப் பெரும் வியப்பை அளித்தது.

''மகனே, அனைவருக்கும் முன்னவனே, எனது இளமையோடு இருக்கும் மூலப்பொருளே, எல்லோராலும் ஓதப்படும் வேதப் பொருளே, தோன்றியுள்ள பிரபஞ்சமும், தோன்றாத மூலப் பிரகிருதியும் ஆகிய இரண்டு நிலைகளிலும் இருப்பவனே, சத் அசத் சொரூபியே. மகிமைகள் அனைத்துமானவனே, உலகப் பற்றில் உழன்று கொண்டிருக்கும் என்னை நீ சிவநெறிக்குட்படுத்தியது விந்தையானது'' என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். சிவன் இப்படியாக விந்தைகள் பலவும் செய்வான். அது அவனது இயல்பு. நீயும் பெரும் சிவபக்தன். அவளும் பெரும் சிவபக்தை. அதனால் இருவரையும் சேர்த்து வைக்க சிவன் இவ்வாறான விந்தையைச் செய்திருக்கலாம். அதனால் உனது முடிவைச் சொல்'' என்றார் கதிரேசன்.

''தாத்தா, என்னால் எதையும் நம்பமுடியவில்லை. என் முன் காளிபோலத் தோன்றிய அவளை எனது மனம் அரக்கியாகவே நினைக்கிறது. அதனால் அதைப்பற்றிக் கதைக்க நான் விரும்பவில்லை'' என்றான் நடராசா.

''அது உனது விருப்பம். அவளது நிலையை நான் தெளிவுபடுத்தியுள்ளேனே தவிர வற்புறுத்தவில்லை. சிவன் செய்யும் விந்தைகளை நாம் கண்டு வியக்கலாமே தவிர அதன் உட்பொருளை உணர முடியாது. அவள் இருந்த நிலையில் அவளது நடத்தை சரியானது. நீ எதற்கும் உதவாத ஏழையாக இருந்தபோது உன்னை அவள் விரும்பியவள். நீ வசதியாக வந்த பின்பு அர்ச்சகா விரும்பியவள். இரண்டிற்கும் பெரும் வித்தியாசம் உண்டு. இருப்பினும் அவரவரது மனநிலை எப்படியானதென்று அவரவரால் தான் உணரமுடியும். உனது மனநிலை எப்படியோ அப்படி நட. நான் வற்புறுத்த மாட்டேன்'' என்றார் கதிரேசன்.

**மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்**

**தெருவுதொறும் மிக அலறிச் சிவபெருமா னென்றேத்திப்**

**பருகியநின் பரங்கருணைத் தடங்கலிற் படிவாமாறு**

**அருளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட அம்மானே. 09**

''தாத்தா, என்னால் முடிவெடுக்க முடியவில்லை. மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவது போல்; "திருவிடை மருதூரில் எழுந்தருளியிருக்கும் சிவனே, மணம் கமழும் உனது திருவடி எனது மனதில் நிலைத்திருந்து அதை உருகச் செய்யட்டும். தெருக்களில் உனது பெருமைகளை நான் உரக்கப்பாடுதல் வேண்டும். உனது

அருட்கடலில் நான் எவ்வேளையிலும் மூழ்கியிருக்க அருள்செய்'' என்பதையே நானும் சொல்ல விரும்புகிறேன். மணம் கமழும் சிவனது திருவடி எனது மனதில் நிலைத்திருந்து எனது எதிர்காலத்தைத் தீர்மானிக்கட்டும். நான் சிவனது புகழைப் பாடிக் கொண்டிருக்க வேண்டும். எனது எதிர்காலத்தை அவன் தீர்மானப்படிதான் செயற்படுத்த விரும்புகிறேன்'' என்றான்.

''நடராசா, உனது முடிவை நான் பாராட்டுகிறேன். நானும் முடிவெடுக்க முடியாத விடயங்களை முடிவெடுக்கும்படி சிவனிடம் ஒப்படைத்துவிட்டு செயலற்று அவனையே நினைத்திருப்பேன். அது போலவே நீயும் இருக்கிறாய். உனக்குச் சிவன் நல்ல முடிவைத் தருவான்'' என்றார் கதிரேசன்.

**நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்**

**தேனாய்என் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்**

**தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்**

**ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே. 10**

நடராசா சிவலிங்கத்தின் முன் கண்மூடியபடி அமர்ந்திருந்தான். அவனது மனம் என்றுமில்லாதவாறு துன்பப்பட்டுக் கொண்டிருந்தது. ''இறைவா, இதுவரை தாங்க முடியாத துன்பங்களைத் தான் அனுபவித்தேன். அப்போது கதிரேசனின் கிருபையால் எனக்கு உனது தரிசனம் கிடைத்தது. எனது துன்பங்களையெல்லாம் உன்னிடம் எடுத்துச் சொல்லும்படி அவர் கூறினார். அதன்படி எடுத்துச் சொன்னேன். அப்போது என்னைச் சூழ்ந்த துன்பங்கள் யாவும் விலகிச்சென்று விட்டன. அப்போது துன்பங்களால் மனக்கவலை மட்டுமே இருந்தது. இப்போ பெரும் சிக்கல்களில் என்னை மாட்டி விட்டாய். மாமா கொடியவர். உன்மீது பிணைப்பில்லாதவர். மது, மாமிசம் உண்பவர். கொடியவர். அவரால் எனக்குப் பிரச்சினைகள் வந்துவிடுமோ என்று பயமாக உள்ளது. அகல்யாவைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் என்னை விரும்புவதற்காகத் தான் என்னை இகழ்ந்தவளாம். இது வியப்பாக இருக்கிறது. இப்படியும் காதல் வருமா..? எனக்குப் புரியவில்லை. எல்லாம் புரிந்தவன் நீ இதற்குத் தீர்வுகாண வேண்டியவனும் நீ. என்னால் உன்னை வணங்குவதையும், உன் புகழைப் போற்றிப் புகழ்ந்து பாடுவதையும் தவிர வேறு எதையும் செய்ய முடியாது. வீட்டுக்குச் சென்றால் அம்மாவின் தொல்லையைத் தாங்க முடியவில்லை. வெளியே சென்றால் வெளியார் என்னைத் திருமணம் செய்யுமாறு தொல்லைப்படுத்துகின்றனர். இதனால் படிக்க முடியவில்லை. நீ விரைவில் ஒரு நல்ல முடிவை எனக்குத் தராவிட்டால் நான் என்னையே அழித்துவிடுவேன். இதைத்தவிர வேறு எந்த முடிவை எடுக்க வேண்டும் என்று நீயே சொல்ல வேண்டும்'' என்று எண்ணினான் நடராசா.

*திருச்சிற்றம்பலம்.*